Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

The paper was [illegible]

SANMARKA POTHINI

பத்திரவிலைவிகிதம்
ஷுக்கு ரூபா க-50
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௰
இந்தியாவுக்கு சதம் ௰
பிறதேசங்களுக்கு ௰

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

விளம்பர விலைவிகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
௪0 க்குமேல்ஒருவரிக்கு 8
௨0 க்குமேல் 6
இலைப்பிரகாமொல்லொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

Published on every
other Tuesday

XXX | JAFFNA AUGUST 18th 1914 | No 17

௩0ம் புத்தகம் | யாழ்ப்பாணம் ஆனந்த ௵ ஆவணி ௴ ௨ செவ்வாய்க்கிழமை. | சஞ்சிகை ௧௭

LIBRARY
2 10- 1995
UNIVERSITY OF JAFFNA

ஓர் கோமாளியின் விவேகம்.

அரசர்கள் தங்கள் பொழுதுபோக்குக்காக ஓர் கோமாளியையும் வைத்திருப்பது முற்காலவழக்கம். அப்படியே ஓர் சுல்தான் அரசர் ஓர் கோமாளியை வைத்திருந்தார். அவரது மைத்துனன் ஓர் பாரதூரமான குற்றத்திலகப்பட்டதினால் சுல்தான் அரசர் அவனைக் கொலைத் தீர்வையிட்டார். குற்றவாளியைக் கொலைக்களத்துக்குக்கொண்டுசெல்லுஞ் சமயத்திலேயே கோமாளிக்கு இச்செய்தியெட்டிற்று. அவனோ விரைந்து இராசசமுகத்துக்கு ஓடிப்போனான். அதைப்பார்த்திருந்த சுல்தான் அரசர், தன மைத்துனனை விடுவிக்கும்படி வருகிறானென்றெண்ணி அவன் வாய்திறக்குமுதலே கோமாளி! இன்றைக்கு நீகேட்பது செய்யப்படமாட்டாதென்றார். உடனே கோமாளி பதிலுத்தரமாக எனது மைத்துனன் அதிக கொடுமைகள் செய்தவன்! துட்டன்!! அவன் மேலேயிருக்கிற கடவுளுக்கும் ஏற்காதவன்!!! ஆதலால் அவனை இன்றைக்குக் கொன்றுபோடவேண்டும் என்றான். அரசரோ நகைத்துக் கோமாளி தன்னை ஏய்த்துப்போட்டானென்றுகருதியும் தன்வார்த்தைக்குப் பழுதுவாராதபடி அது செய்யப்படாதென்றார். கோமாளியோ சந்தோஷமாய் வீட்டுக்குப்போனான். சடுதிவிவேகம் எல்லார்க்குமிராது. அவ்விதவிவேகி ஆபத்திற்குத் தப்பிக்கொள்வான்.

யுத்தம்! யுத்தம்!

அவுஸ்திரிய இளவரசரையும் அரசியையும் கொன்ற கோபத்தால் அவுஸ்திரியா சேர்வியாவைத்தாக்க முன்வர ருஷியா சேர்வியருக்கு உதவிசெய்ய முன்வந்தது. அவுஸ்திரியாவுக்கு உதவிசெய்வதாய் வாக்களித்திருந்த சர்மனி முதலே பிரான்சைத்தாக்க எண்ணிற்று. பெல்சியத்துக்கூடாகவே பரீஸ்பட்டினத்துக்குப் போகவேண்டியிருந்ததால் பெல்சியரை வழிவிடும்படி கேட்டது. பெல்சியம் தான் நடுவுநிலைமையிலிருப்பதால் இடங்கொடுக்கக்கூடாதென்று சர்மனிக்குத் தெரிவிக்க சர்மனி அதற்குடன்படவில்லை. பின்பு அங்கிலேயர்க்கு முறையிட்டனர். அங்கிலேயர் பெல்சியத்தை நடுவுநிலைமையுள்ளதாயிருக்க விடவேண்டுமென்று சர்மனியைக்கேட்டார்கள். சர்மனி உடன்படாததினால் சர்மனிய தலைநகரான பெர்லின்பட்டினத்திலிருந்த பிரித்தானிய தூதர் அதைவிட்டுப் புறப்படச் சர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

நாம் இந்த யுத்தந்தொடங்கினபோது சாவதேச யுத்தமாய் உலகத்துக்குப் பெரிய கஷ்டமாய்வந்துமுடியுமென்று நம்பி அஞ்சினோம். தற்போது அவ்வளவாய் யுத்தம் நீடிக்குமென்ற நம்பிக்கையில்லை. என்றாலும் பல கோடாகோடி உயிர்கள் இதற்குப் பலியாவாரென்பதில் மயக்கமில்லை.

தற்கால யுத்தத்தைநோக்கினால் சர்மனியும் அவுஸ்திரியாவும் ஒருபக்கமும், அங்கிலேயர் பிரான்சியர் ருஷியர்களும் பெல்ஜியம் ஒல்லாந்து யப்பான் சேர்வியா மொன்றினிக்கிரோ மறுபக்கமாகவும் நிற்கின்றன. இன்னும் இத்தாலியும் அமெரிக்காவுங் கூடின கையுடன்தான் சேரும். ஆதலால் சர்மனியர்பாடு "பனிமைகம்பி எர்பூட்டினவன்" போலப்பரிதாபநிலையிற்றான் வந்துமுடியும். ஒரு தனிஅரசுடன் எதிர்த்தால் சர்மனி வென்றுவிடும். உலகத்திலுள்ள இராச்சியங்களுள் அவுஸ்திரியாதான்சர்மனியைத்தாங்கிநிற்கிறது. சர்மனியர் உபாயமாய்க் கருமம்பார்ப்பவரல்லவர். தம்மைப் பெரிதாய்மதித்து மற்றவர்களைத் துரும்புபோலெண்ணியிருந்தவர்கள். இத்தாலியும் உடன்படிக்கைப்படி தம்முடன் சேருமென்றே யுத்தந்தொடுத்தார்கள். ஆனால்இத்தாலி தான்தப்பநினைத்து தருணத்தில் பின்வாங்கிவிடவே சர்மனியும்அவுஸ்திரியாவும்சிக்கிலகப்பட்டன. தாமஅக்கிரசத்துக்குள்ளாய்ப்போய்ப் பிரான்சரைத் தாக்கவில்லையென்றகோபத்தினால் [illegible] பகைத்துக் கொண்டார்கள். ஆவுஸ்திரியாவிடமுள்ள யுத்தக்கப்பல்கள் தற்காலத்துக் கப்பல்களுக் கீடானவையல்ல. அதனாலும் அவுஸ்திரியா இளைத்ததைதான். சர்மனியின் ஆயத்தத்தையறிந்த அங்கிலேயர் ராதியா மிகப் பயந்திருந்து தருணங்கண்டு தக்க அணியுடன் புறப்பட்டிருக்கிறார்கள். சர்மனி எவ்வளவு சுறுசுறுப்புக்காட்டினும் இம்முறை அதிக சேதமடைந்து தலைகுனியத்தானநேரிடும். சர்மனி, ருஷியாபிரான்சருமேவந்து பெல்ஜியத்துக்கு உதவிசெய்யுமுன் தான் பரீசிற்புகுந்து முற்றுகையிடநினைத்திருந்தது. ஆனால் பெல்ஜியர் தடுத்துச் சர்மனியை மடக்கடிப்பதினால் தாமதமாகி அவர்கள் பிரதிகூலப்படுகின்றனர். சர்மனியர் பெல்ஜியரின் சாங்கவெடிக்குட்பட்டும் பிரான்சியர் அங்கிலேயர்சமீபிப்பதினாலும் பின்னிடவேண்டியவர்களாயேயிருக்கிறார்கள்.

பதார்த்தசாரம்.

லவாந்தர். Lavender.

இப்பூடு ஐரோப்பாவிலுள்ளது. பூக்களை வாலையிலிட்டு எரித்தெடுக்கும் எண்ணெய் நல்லமணமுள்ளது. கருப்பை வியாதிகளாலுண்டாகும் மாருட்டம் வாய்வு இவைகளைத்தீர்க்கும். இதைத் தனியேபயோகிப்பதரிது. இதை வேறு மருந்துகளுடன்சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. கறுவாத்தூள் 150 கிறேன், சாதிக்காய்த்தூள் 150 கிறேன், செஞ்சந்தனம் 300 கிறேன் எடுத்து இதை ஒருநாழி சாராயசத்தில் ஏழுநாளளவு நனைத்து இடைக்கிடை குலுக்கி அப்பால் பிழிந்து லவாந்தர்தைல ஒன்றரைத்திறாம் ரோஸ்மரிதைல் 10 துளிவிட்டுக் கரைத்து வடித்து ஒருநாழிதேறக்கூடிய சாராயசத்துச்சேர்க்கவும். இது நல்ல பலனைகொடுக்குமருந்து. மூளைப்பிசகு ஸ்தேசினென்னும் மாருட்டநோய் ஆம்பமுர்ச்சை வாய்வுப்பொருமல் வயிறுமுதலிய பிணிகளுக்கு நல்லது.

பித்த புயித்தியமும் பேசுங் கருப்பையதி
லொத்தநோ யெல்லா மொதுங்கிவிடும்—மெத்த
வயிற்று வலிபோம் மணக்கொன்ல வாத்தர்
குயிற்றுங் கலவையினைக் கொள்.

வசம்பு. Sweet Flag.

இது தேகத்தில அனலையுண்டாக்கும் மருந்து. பலமும் உஷ்டணமுமாம். வாதரோகம் கியபிரோகம் வயிற்றுப்பொருமல் வயிறுநூருலை தர்ப்பலம் மந்தியதி சொறிகிரந்து முறைச்சுரம் மாந்தம் குன்மம் இரத்தபித்தம் வாயநாற்றம் சன்னி புண் காசம் வாந்திபேதி தீர்க்கும். தெள்ளுமுதலிய பூச்சிகளைக் கலைக்கும், கொல்லும்.

வாதம் இருமி வயிற்றுப் பொருமல்குன்மம்
மோதுசொறிசன்னி முறைச்சுரமும்—பேதிபித்தம்
தர்ப்பலமகாசம் தொடர்புண்வாயநாற்றமும்போம்
வீர்த்தி யுறுவசம்பால் விள்.

சுத்தம்.

(தொடர்ச்சி)

நம்முடைய உடுப்பையும் படுக்கையையும் சுத்தமாய்வைக்கவேண்டும். தேகத்திலிருந்து வெளிப்படும் வெயர்வையும் நம்மைச்சுற்றியிருக்குந் தூசியும் துப்புக்கூடி அவற்றை அசுத்தமாக்கி அவற்றினின்று துர்நாற்றம்வீச ஆரம்பிக்கச் சுற்றிலுமிருக்கும் ஆகாயங்கெட்டு நோய்க்கிருமிகள் வளர்ந்துகொண்டிருக்க ஏதுவாகும். ஆகையால் நம்முடைய படுக்கையையும் அடிக்கடி தோய்த்துச் சுத்தமாய்வைத்திருக்கவேண்டும். படுக்குந் துணிகளை வெயிலிற்போட்டு உலர்த்தவேண்டும். இப்படிச்செய்துவந்தால் மூட்டைப்பூச்சி உபத்திரவஞ் சற்றேநீங்கும். சிலர் தங்கள்வீடுகளிலே மூட்டைப்பூச்சிகளைக் காப்பாற்றிக் கண்விழித்து [illegible] ரிலும் தரையிலும் பாய்களிலும் மூட்டைப்பூச்சிகளைநசுக்கி அதின் இரத்தத்தைத் தேய்க்கிறது சாதாரணவழக்கம். சிலர் விளக்கைக்கொளுத்திச் சுவர்களிலும் பாய்களிலும் நெருப்பால் சுட்டுவிடுகிற வழக்கமுமுண்டு. இப்படிச் சுட்டுக்கொல்லுகிறதினால் மூட்டைப்பூச்சி அதிகம்பரம்ப ஏதுவாகும். வீட்டுத்தரையைத் தினமும்மெழுகிச் சுத்தம்பண்ணவேண்டும். வருஷத்துக்கு ஒருமுறையாவது சுவர்களுக்குச் சுண்ணாம்பு அடிப்பது நல்லது. எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையுந் திறந்துவைத்துச் சுத்தமான ஆகாயம் வீட்டில் உட்கொள்ளவேண்டும்.

V. G.

பத்திரகிரயம்.

K. Lumbur

P. Cumarasuriar Esq. Reailway Accountants Office	5—00
G. Nadarajah Esq.	2—00

மேலேகாட்டிய மெஸ், குமாரசூரியா நமது பிரவேச விஞ்ஞாபனத்தை நினைவுகூர்ந்து மேற்படிதொகையை அனுப்பி வைத்ததற்காகமிக்கவந்தனங்கூறுகிறோம்.

யாழ்ப்பாணம்.

மாரிச்சீர்.

சிறுமழைபெய்தது செந்நெல்விளைப்போர்
மறுமழைகண்டு மகிழ்ந்திவளைப்பார்
உறுமமாரலே யொறுத்தனபொருள்கள்
குறுகினவிலைதேக் காய்கொப்பரேவே.

மார்க்கவாதி—நீர்வேலியில் முன் மறியல்வீட்டிலிருந்து தப்பியோடிப் பிடிபட்ட சரவணமுத்துச் சிலகாலம் நற்குணமாய் வசித்திருந்து சிலமாசங்களாய்ப் பல துற்கிரியைகளிற் கையிட்டுத் தறும்புசெய்து சில விருந்துகளில் ஒளித்துத்திரிகிறதாயும் இரவில் ஒருத்தியின் நகையை அறுத்துக்கொண்டோடியதாயுங் கேள்வி. கலகம் மெய்யானால் புழுதாநவன்பாவியென்றவாறுச்சரவணமுத்து அங்கேவந்துவிட்டான், இங்கேவந்துவிட்டானென்றுசனங்கள் கதைகட்டிவிட அநியாச்சனங்கள் தனியே தெருவாற்செல்லவுந் திகிலடைகின்றனர். ஆதலால் இப்பயத்தை மாற்றவேண்டியது அரசினர்கடமை.

புகைரதவபாயம்—சென்ற 9௳ காலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற புகைரதம் முகமாலைக் குறுக்குப்பாதையாற்சென்ற ஓர் ஒற்றைமாட்டுவண்டியைத்தட்டி அதற்குளிருந்த ஒருவர்வீழ்ந்து மண்டையுடைந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு இறந்தார். வண்டிக்காரனின்கால்முறிந்து வைத்தியசாலையிற் பரிசரிக்கப்பட்டுவருகிறான். வண்டி பொடிப்பொடியாயிற்று. மாடு தப்பிவிட்டன. இவ்வகைச்சம்பவங்கள் நெயிற்பாதையாலேசெல்லும் வண்டிக்காரரின் கவலையீனத்தால் நேரிடுகிறது.

வியாபாரிகளின்நிலை—ஐரோப்பிய யுத்தம் நடப்பதினால் சாமான்வரவு குன்றுமென நம்பி வைத்திருக்குஞ் சாமான்களை உயர்த்திவிற்க வியாபாரிகள் தெண்டித்தார்கள். அரசினர் அப்படிச்செய்யக்கூடாதென்று தடுத்தமையாலும் உயர்த்திவிற்றவர்களுக்குத் தெண்டமிடப்பட்டமையாலும் அவர்களின்முயற்சி அனுகூலப்படவில்லை. யுத்தம் சீக்கிரமொழியாவிடின் இறக்குமதிச்சாமான்கள் விலை ஏற்றமாய்த்தான் விடும்.

புகையிலைச்செய்கைப்பரீட்சைத்தோட்டம்—இத்தோட்டத்தின் நிலத்திற்கு மூன்றுவருஷங்களுக்குக் கிருஷிகசங்கத்தார் [illegible] ல் இந்துசாதன இங்கிலிஷ் பத்திராதிபரான ம-ா-ா-ஸ்ரீ அ. சபாபதிப்பிள்ளையவர்கள் தாமே அப்பணத்தை யாழ்ப்பாணத்தவரிடஞ் சேர்த்துக்கொடுக்க உடன்பட்டிருக்கிறார். நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகள் (நகரசங்கத்தார்) இதற்காக 200 ரூபாய் கொடுத்திருக்கிறார்களாம். மற்றைய தேசாபிமானிகளுந் தக்க உதவி செய்வார்களென நம்புகிறோம். இத்தோட்டம் திருநெல்வேலியில் நடத்தப்படுமென முன் தெரிவித்திருக்கிறோம்.

அபராதக்குறைத்தல்—கள்ளமாய்க் கள்ளுவிற்ற அல்வாயான் ஒருவனுக்குப் பருத்தித்துறைப் பொலிஸ்கோட்டில் 150 ரூபா தெண்டமிடப்பட்டது. அவன் சரியான விளக்கமல்லவென்று அப்பீல்செய்ய அதை மறுபடி யாழ்ப்பாணக் கோட்டில் விளங்கும்படி வந்து அதிலுங் குற்றவாளியானான். ஆனால் தெண்டம் 50 ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

பரிதாபமான அபாயமரணங்கள்—நெடுந்தீவானொருவன் ஓர் கொண்டாட்டத்திற் பங்குபற்றும்நோக்கமாய்த் தபாற் கட்டுமரத்திலேறிச்சென்றபோது நயினாதீவுக்கடலில் தவறிக் கடலுள்வீழ்ந்திறந்தான். அதைத்தேள்வியுற்ற நெடுந்தீவார் துக்கங்கொண்டாடும்படி ஓர் வள்ளமூலமாய் நயினாதீவு நோக்கிவருகையில் காற்றின் உக்கிரத்தினால் பாய்மரமுறிய வள்ளங்கவிழ்ந்து பத்துப்பேர் கடலில்ஆழ்ந்திறந்தனர். இவருள் மூவர் பெண்களாம். பரிதாபமே!

சீனிக்கொம்பனி—சண்டையென்றவுடனே கொம்பனியும் முறிந்துவிட்டதென்று சிலர் கதைகட்டினர். அது பொய், கம்பனி முன்போல நடைபெற்றுவருகிறது.

தருமார்த்தவரிப்பணம்—இப்பணம் எங்குமில்லாத அநியாயவரியென நம்தேசாபிமானிகள் உணர்ந்து அதையும் நீக்கிவிட்டாவோவென மேலாசாட்சியாருக்கு எழுதினர். தற்கால யுத்தவில்லங்கத்தில் இதை நீக்க உடன்படுவாரோ தெரிகிறதில்லை.

கடின வியாபார சட்டம்—பருத்தித்துறையில் ஒருவன் ஒருபோத்தல் மண்ணெண்ணெய் 40 சதமாய் விற்றதினால் 50 ரூபா தெண்டமிடப்பட்டான்.

சிலாவத்துறை நீர்ப்பாய்ச்சல்—சிலாவதுறை நீர்ப்பாய்ச்சப்படுமென்று நெடுங்காலமாய் நம்மவர்கள் காத்திருந்தார்கள். ஈற்றில் அதற்குரிய செலவுக்கு 20000 ரூபா கொடுக்க அரசினர் உடன்பட்டு அளவையும் நடத்தினர். ஈற்றில் அது வீண் செலவென்று கைவிடப்பட்டதாய் இராசமாலிகிதர் கூறினாராம். இத்துடன் மூன்றுவது முயற்சியும் அற்றது.

சேர். பொ. அருணாசலமவர்கள்—இலங்கை ரிஜிஸ்ரார் ஜெனறலாயிருந்து இளைப்பாறியவரும், அரசரால் சேர்பட்டம் அளிக்கப்பெற்றவருமாகிய இவரும் பாரியாரும் நேற்று யாழ்ப்பாணம்வந்து றிச்சுவேமண்டபத்திற் தக்கஉபசரணை செய்யப்பட்டனர். இவர் நற்குண நற்செய்கையுடையர். அங்கிலோ திராவிட பாஷாநிபுணர். அரசினரால் சன்மானிக்கப்பெற்ற நம் சாதியாரின் திலதமாய் விளங்குபவர். இவர்க்குத் தக்கஉபசரணை செய்ய நாமெல்லாருங் கடமைப்பட்டிருக்கிறோம்.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். துர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கால்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், நீர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும். (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.



ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. 10 8 0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்பிலியு. எச். [illegible] துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

இலங்கை.

கொழும்பில் யுத்த ஆரவாரம்.

கொழும்பில்வந்த மூன்று சாமனிய வியாபாரக்கப்பல்கள் மறியற்படுத்தப்பட்டது. எண்ணெய்த்தொட்டிகளும் கரிமலைகளும் காவல்செய்யப்படுகின்றன. சீனி நெருப்புப்பெட்டி ஆகியவைகளின் விலை ஏறிவிட்டது. போக்குவரவுத் தந்தி தபால்கள் ஆராய்ச்செய்யப்படுகின்றன. 2485 பேர்கொண்ட பொலிசுபட்டாளம் கொழும்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பாலங்களையுங் காவல்செய்கின்றனர். காலிக்கடலிற்சென்ற சர்மனியவியாபாரக்கப்பலொன்றையும் பிடித்துவந்து கொழும்பில் மறியற்படுத்தினர்.

கொழும்பிலிருந்த [illegible] அவுஸ்திரியரும ஒருசர்மனியரும் உத்தரவுபெற்றுப் பத்தாவியாவுக்குப் போய்விட்டார்கள்.

குருமாருட்பட 40 பிரசைக்காரர் தந்தேசம்போக ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கொழும்புக்குவந்த கப்பலொன்றிலிருந்த மூன்று சர்மனியர் மறியற்படுத்தப்பட்டார்கள். மண்ணெய்க் கப்பல் இரண்டும் கரிக்கப்பலொன்றும் கொழும்புக்குவந்தது.

பெல், குணரத்தின முதலியார்—லீவில் இங்கிலாந்துசென்ற மகாமுதலியாரிடமாய் சிலகாலத்துக்கு நியமிக்கப்பட்டிருந்த இவரும் [illegible] சடுதியிலிறந்துவிட்டார்.

கஞ்சா லேலம் வைத்திருந்தவர்கள்—கொழும்பில் கஞ்சாலேலம்வைத்திருந்த ஒருவனுக்கு 150 ரூபாயும் வேறொருவனுக்கு 250 ரூபாயும் தெண்டம் விதிக்கப்பட்டது. இச்சட்டத்தை இன்னொருமுறை புனராலோசனை செய்தாலோ?

கப்றன் சால்மேஸ்— தேசாதிபதியின் புத்திரனும் அவரின் மெய்காப்பாளனுமான இவர் தற்கால யுத்தத்திற் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார்,

---

கண்டி ஏசன்றர்—இவர் கச்சேரித்தலைமைலிகிதரோடும் சிறுப்பரோடும் கடைவீதிக்குச்சென்று சாமான்களுக்கு விலையேற்றக்கூடாதென்று வியாபாரிகளைக் கேட்டுக்கொண்டனர்.

பூமியதிர்ச்சி—இலங்கையிலிருந்து 600 மைல்தூரத்தில் சென்ற 5௳ பூமியதிர்ந்ததாகச் சோதிடோப்பரிகைக் கருவிகாட்டிற்றாம்,

---

திருட்டு—பொறுப்பான உத்தியோகத்திலிருப்பவர் பெருஞ்சம்பளம்போதாதென்று திருடலிற் சிந்தைவைத்துச் சிலர் தப்பியும் சிலர்சிக்கியும் போகின்றனர். நாவலப்பிட்டி லோக்கல்போட்சக்கிடுத்தார் திருட்டுக்குற்றஞ்சாட்டப்பட்டு நாலுவருஷ மறியலூழியத் தீர்ப்புப்பெற்றார்

நீதிஸ்தலத்தில் நித்திரைகொண்ட யூரி—கொழும்புச்சுப்பிறீங்கோட்டில் ஓர்கொலைவழக்குநடக்கையில் ஒருயூரி நல்லநித்திரை கொண்டாராம். அவர்மேல் கோட்டுநிந்தாட்சணைக்கு வழக்குவைக்க எத்தனித்திருக்கையில் அவருக்காக அப்புக்காத்து ஹரிசந்திரசேகரர்பரிந்து பேசினமையால் எச்சரித்துவிடப்பட்டார்.

இலங்கையிலுள்ள சர்மனியர்—இலங்கையிலுள்ள 51 சர்மனியர் கலகமின்றி இலங்கைஅரசுக்கடங்கி இலங்கையில் வசிக்கப்பிரியப்பட்டபடியால் அரசாட்சியாரிடங் கொடுத்திருக்கிறார். இவருட் பறுடன்போர்க்கம்பனியாரும் சில சர்மனியகுருமாருங்கன்னியாஸ்திரிகளுஞ்சேர்ந்தவர்கள்

இலங்கைச்சருவகலாசாலை—இலங்கையில் சர்வகலாசாலையொன்றுண்டாக்க வேண்டுமென்னும் அவா நமது தற்காலத்தேசாதிபதியவர்களுக்குண்டாய் அதைக்குறித்து இராசமாலிகிதருக்கு எழுதியிருப்பதாய்த் தெரிவித்திருக்கிறார்.

சிறுவர்கள் நற்சுகம் அடையும்படி

பெற்றோர் அதிக கவனமாயிருக்கிறார்கள். சிறுவன் சந்தோஷமற்றிருந்தாலும் சாப்பாட்டில் நல்விருப்பமாயிராதாலும் இதை அவனுக்குக் கொடுக்கிறதற்குப் பின்னிற்கவேண்டாம்

ஸ்கொற் இமல்ஷன்

என்னும் மருந்தில் சில துளிகளைப் பாலுடன் சேர்த்து அவனுக்குக்கொடுத்தால் பெரிய மாறுதலை உண்டாக்கும் அவன் சந்தோஷமும் உற்சாகமுமுள்ளவனும் சாப்பாட்டுப்பிரியமுள்ளவனும் நற்சுகமுள்ளவனும் வருவான். இதுவே நற்சுகத்தின் அடையாளம்

[illegible] 'Emulsion' [illegible]

கையால்

தொடப்படாது

எல்லாமருந்துவியாபாரிகளிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

Scott & Bowne Ltd
Manufacturing
Chemists,
London England

வர்த்தமானத்திரட்டு.

யுத்த தந்தி.

சண்டைச்செய்தி கூறப்பட்டவுடனே லண்டனில் பிரித்தானிய கொடியையும் பிரான்சியகொடியையும்பிடித்துத் தேசாபிமான பாட்டுகளைப் பாடிச் சனங்கள் பவனிசென்றார்கள். அரசரும் அரசியும் உவேல்ஸ்இளவரசரும் பலகணியிற்தோன்றி அவர்களை உற்சாகப்படுத்தினர்.

பிரித்தானிய கப்பற்படையின் தலைவராய் அட்மிரல் சார்ஜோன்ஜெலிக்கோ என்பவர் நியமிக்கப்பட்டார். அட்மிரல் மாடென் என்பவர் உத்தியோகஸ்தரின் தலைவராய் நியமிக்கப்பட்டார்.

பிரித்தானிய அரசர் தம் கடற்படைக்கு ஓர்செய்தியனுப்பினார். அதில் கடற்படை உத்தியோகஸ்தரும் யுத்தவீரரும் அப்படையின் பூர்வீகமான பெருமையைத் தம் செயற்கைகளாற் பிரசித்தப்படுத்துவார்களென்றும் அபாயகாலத்தில் பிரித்தானியாவின் கவசமாயுள்ளவர்கள் தாங்களேயென்று நிரூபிப்பார்களென்றும்தாம் நம்பியிருப்பதாகத் தெரிவித்தார்.

பிரித்தானிய அரசாங்கத்துக்குட்பட்ட எல்லாக் கம்பிகளற்ற தந்தியின்தாபனங்களையும் பிரி[illegible]னிய அரசாங்கம் தன்னதிகாரத்தில் வைத்துக்கொண்டது. பிரித்தானிய எல்லைக்குள்செல்லும் அன்னியகப்பல்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பியில்லாத் தந்திபேசுங்கருவிகளையும் கைப்பற்றிக்கொண்டது.

ஐயர்லாந்தில் கட்சிப்பிரிவையொழித்து அல்ஸ்டர்சனங்களும் நாஷனலிஸ்தர்களும் தங்கள் போர்ச்சேவகர்களை அரசாட்சியாருக்கு ஒப்புக்கொடுக்கச் சம்மதித்தார்கள்.

பிரித்தானியசபையில் சண்டைச்செலவிற்காக 75 கோடி ரூபா கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அவுஸ்திரியர் சேர்வியாவைத்தாக்கிப் பெல்கிறேத்நகரைச் சுட்டெரித்து முன்செல்லவே சேர்வியரும் பலமாய்த்தாக்கினர். அதற்கிடையில் சர்மனியும் யுத்தத்தில்மாட்டி பிரான்சுடனும் ருசியாவுடனும் அங்கிலேயருடனும் பெல்சியத்துடனும் பொரவேண்டிய சங்கடத்தை உத்தேசித்து ருசியாவுடன் பொரும்நோக்கமாக அவுஸ்திரியசேனை சேர்வியாவைவிட்டு மறுபுறந்திரும்புகிறதாக நம்பப்படுகிறது.

சர்மனி பிரான்செல்லையுட்புகப் பிரான்ச சர்மனியெல்லையுட் புகுந்தது. லிபோவென்ற ருசியதுறைமுகத்தைச் சாமனிய போர்க்கப்பல்கள் தாக்கின. ஆகாயக்கப்பலிற்சென்று சில வெடிக்குண்டுகளைச் சர்மனியர் எறிந்ததினால் சிலர் காயப்பட்டனர்,

வடகடலில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் பிரித்தானிய கப்பல்களையெல்லாம் அழைத்துவர ஓர் நீராவிக்கப்பல் சென்றது.

இங்கிலந்திலிருந்து நிலக்கரி யேற்றிப்போன சாக்சன் என்ற பிரித்தானியகப்பலைச் சர்மனிய கப்பல்கள் பிடித்து எல்ப்நதி முகத்துவாரத்துக்குக் கொண்டுபோயின.

எகிப்துதேசத்துக் கவர்னர் ஜெனறலாகிய லோட் கிற்சினர் யுத்தமந்திரியாய் நியோகிக்கப்பட்டார்.

தென்னாபிரிக்காவில் அனேகர் யுத்தத்திற்குப்புறப்பட ஆயத்தமாயிருக்கிறார்கள். கனடாவில் கப்பற்படைக்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள்.

கனடா ஆஸ்திரியா நியூசிலன் முதலிய குடியேற்றநாடுகளெல்லாம் தாயரசுக்கு உதவிசெய்யக் காத்துக்கொண்டிருக்கின்றன.

லூன்வில்லியென்ற பிரான்சுப் பட்டினத்தின்மேல் சர்மனிய ஆகாயக்கப்பலொன்று சிலகுண்டுகளை எறிந்தது.

கரோஸ்என்ற பிரான்சிய ஆகாயவிமானி சர்மன் ஆகாயவிமானமொன்றைத்தாக்கி அதை நாசஞ்செய்துவிட்டாராம்.

ருசியாவின் தென்மேற்கெல்லையிலுள்ள போலண்டுமாகாணத்தில் சர்மனி படையெடுத்து மூன்றுபட்டினங்களைப் பிடித்துக்கொண்டதாம்.

ஆபிரிக்காவின் வடமேற்கில் பிரான்சரின் ஆளுகைக்குட்பட்ட அல்சீரியாபட்டினத்திலுள்ள போனென்ற கடற்கரைப் பட்டினத்தின்மேல் சர்மனியகப்பலொன்று பீரங்கிகளைச் சுட்டுவிட்டு மேற்குநோக்கிச் சென்றுவிட்டது. அத்துறைமுகத்துக்கப்பால் பாண்தேர் என்ற பெயருடைய சர்மனிய போர்க்கப்பலைப் பிரான்சிய கப்பற்படை கடலில் அமிழ்த்திவிட்டது.

அங்குள்ள சில பட்டினங்களை மத்தியதரைக்கடலிலுள்ள சர்மன் போர்க்கப்பல்கள் நாசமாக்கிவிட்டன. கோபர் பிரேஸ்லா என்ற வேறிரண்டு சர்மன்போர்க்கப்பல்களைப் பிரான்சிய கப்பற்படை பிடித்துக்கொண்டது.

ருசிய சர்மனிய எல்லையில் இருபகுதிச்சேனைகளுங் கைகலந்து யுத்தமாடினர். ருசியரின் கிராமத்துட்புகுந்த சர்மனியர் சிலஇடங்களைச் சுட்டெரித்துவிட்டுத் திரும்பிவிட்டார்கள்,

பெல்வோட் பட்டினத்திற்குச் சமீபத்தில் சர்மனியபோர்வீரர் உணவுப்பொருட்களைக் கொள்ளையாடுகிறார்கள். சர்மனிக்குப் போய்க்கொண்டிருந்த 2 கோடியே 40 லட்சம்ரூபாவைப் பிரான்சு அரசாட்சி பறிமுதல் செய்தது.

மெஸட்பட்டினத்தின் குடிசலத்தை நஞ்சிட்டுக் கெடுக்கத்துணிந்த பிரான்சுடக்தரும், கூவமென்னுமிடத்தில் தரைக்கீழுள்ள மெயிற்பாதைக்குழாயை வெடிமருந்தால் தகர்க்கமுயற்சித்த பிரான்சரும் விசாரணையின்பின் சர்மனியரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

ஆலண்ட்என்ற தீவுக்கருகில் சர்மனிய ருசியர்க்கிடையில் கப்பற்போருண்டாய் ருசியர் பின்லண்ட் குடாக்கடலிற் துரத்தப்பட்டார்கள். ஓர்ருசியகப்பல் கரைதட்டிற்று. சர்மனியர் ஆலண்ட்தீவைப் பிடித்துக்கொண்டார்கள்.

சர்மனியர் பெல்சியத்துட்புகுந்து யுத்தமாடினர். மியூஸ்நதியிற் பாலங்கட்டி அப்பாற்செல்லமுயன்றதில் பெல்சியர் எதிர்த்துக் குண்டுமாரிசொரிந்து கனசேதத்தையுண்டாக்கினர். ஆனால் ஈற்றில் சர்மனியர் ஆற்றைக்கடந்துவிட்டனர். குதிரைப்படைகள் ஒன்றையொன்று எதிர்த்துப்பொருதின. பெல்சியரின் லீச்என்ற பட்டினத்திலுள்ள கோட்டைகள் குண்டுமாரிசொரிந்து சர்மனியரைத் தாக்கிற்று.

சர்மன் குதிரைப்படையொன்றவெருண்டோட அதைப் பெல்சியர் பிடித்துக்கொண்டார்கள். கோட்டையைப் பணிந்துவிடும்படி சர்மனியர்கேட்டும் பெல்சியர் சம்மதிக்கவில்லை. பெல்சியர் பாலங்களைவெட்டிவிட்டு றெயில்பாதைகளையழித்துச் சர்மனியரின் முன்னேற்றத்தைத் தடுத்தனர்.

சர்மனியர் வடக்கேசென்று ஒல்லாந்துதேச நடுநிலைமைக்குவிரோதமாக அதிலும் புகுந்துவிட்டார்கள். லைர்ஸ் அர்ச்சென்றென்ற இருபட்டினங்களுந் தீப்பற்றியெரிகின்றன. அங்குள்ள சிலரைச் சர்மனியர் கொலைபுரிந்ததாகத் தெரிகிறது. லீச்நகரின்மேல் ஒருலட்சம் சர்மனியர் முன்னேறிப்போய் லீச்சு நாமூர் என்னும் இரண்டு பட்டினங்களையும் வளைந்துகொண்டு பீரங்கிகளால் தாக்குகிறார்கள்.

பெல்சியத்தில் வேறிரண்டுபட்டினங்களுள் சர்மனியர் புகுந்தனர். எம்[illegible] நதிக்கரையிலுள்ள சிலகோட்டைகள் எரிகின்றன.

லீச் என்ற பட்டினத்திற்கருகில் சர்மன்படையைப் பெல்சியபடைகள் துரத்திவிட்டன. சர்மனியரில் 8000 பேர்சேதமாக 800 பேர் காயப்பட்டார்கள். 7 பீரங்கிகளை இழந்துவிட்டார்கள்.

சுவிற்சலாந்துதேசம் நடுநிலைமையிலிருக்கவிரும்பினதால் அதற்குள்ளும் சர்மன்படை புகுந்துவிட்டன.

ஒல்லாந்துதேசத்தில் லிம்பர்க் மாகாணத்தின் மேலும் சர்மனியர் படையெடுத்துப் போயினர்.

சீனாவில் சர்மனியருக்குரிய துறைமுகமாயிருந்த கியாச்சோவில் சர்மனியர் யுத்தசட்டத்தை நடப்படுத்தினர். பிரித்தானியர்முதலான எல்லா அன்னியரும் வெளியேபோய்விடவேண்டுமென்று சட்டம்பிறந்தது.

அமரிக்க ஐக்கியதேசமும் சுவிடன்தேசமும் துருக்கிதேசமும் தாம் நடுநிலைமையை அனுசரித்திருப்பதாய்த் தெரிவித்துவிட்டது. துருக்கியும் ஒல்லாந்தும் யுத்தஆயத்தங்கள் செய்கின்றன. ஆனால் துருக்கி தன்னைக்காப்பதற்கே தான் சேனையைச்சேர்க்கிறதாக அறிவித்திருக்கிறது.

பிரான்சிய கப்பற்படைமந்திரி தம்வேலையைவிட்டுவிட்டார்.

பிரித்தானிய மந்திரிமாரான லோட் மார்லியும் மெஸ், ஜான்பேர்ன்ஸ் என்பவரும தம் உத்தியோகத்தை இராசினாமாக்கொடுத்துவிட்டார்கள்.

ஓர் சர்மனிய ஆகாயக்கப்பல் பிரான்சுதேசத்தின்மேற் பறந்துவந்து நால் பட்டினத்தின்மேல் வெடிக்குண்டெறிய ஆயத்தமாயிருக்கும்போது கரோஸ்என்ற பிரான்சிய ஆகாயகமனி அப்பட்டினத்தைக்காக்கத் தன்பிராணனைப் பலிகொடுத்தார். அவர் தன்கப்பலை மேலேசெலுத்திச் சர்மன்கப்பலைத்தாக்கி இருவருஞ்செத்துக்கீழேவிழுந்தார்கள். ஓர்சர்மனிய ஆகாயகமனி லூய்ன்வில்என்றபிரான்சுப்பட்டினத்தின்மேல் மூன்று வெடிக்குண்டெறிந்தான். அதனால் சிலரிறந்தனர்.

பிரின்ஸ் போனப்பாத்என்ற இராசகுமாரர் பிரான்சுக்குவந்து யுத்தசேவைசெய்யத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

பெல்சியத்தில் விஸ அர்சென்டல் என்ற இருபட்டினங்களும் சர்மனியரால் தீயிட்டெரிக்கப்பட்டன. அவைகளிலுள்ள சனங்கள் மெஸ்டிரிக்பட்டினத்துக்கு ஓடிப்போகிறார்கள்.

ஓர் பெல்சிய ஆகாயகமனி சர்மன் ஆகாயகமனி ஒருவனைத்தாக்கி அவனதுகப்பலை இரண்டாய்க்கிழித்துக் கீழேதள்ளிவிட்டுத் தான் ஆபத்தில்லாமல் அப்புறம் பறந்துசென்றான்.

ஒல்லாந்தர் ஓர் சர்மனியஆகாயக்கப்பலை நாசஞ்செய்தனர்,

மெமெல் லீச் என்ற இருதுறைமுகங்களுக்குச் சற்றுத்தூரத்தில் 19 சர்மன் சண்டைக்கப்பல்கள் நங்கூரமபோட்டிருக்கின்றன.

அமரிக்காவிலிருந்து லண்டனுக்கும் பரீசுக்கும் 20 லட்சம்பவுண் ஏற்றிவந்த லாயட்கம்பனிச் சர்மனியகப்பல் தன்கீராவிக்குழாயை வேறுவர்ணமாய் மாற்றிவிட்டுப் பின்னணியத்தைப் பாயகளால் மறைத்துக்கொண்டு திரும்பி அமரிக்காவுக்குப் போய்விட்டது.

சர்மனியர் 24 மணிநேரத்திற்கு இறந்தவர்களை அடக்கச் சண்டையைநிறுத்தும்படிகேட்க அதற்குப் பெல்சியரிணங்கிவிட்டார்கள். காயப்பட்ட செத்த சர்மனியர் 25000 பேர்வரையிலிருக்குமாம்.

சர்மன் குதிரைப்பட்டாளத்திலொருபகுதி விசேபட்டினத்திற்குவடக்கே ஆற்றைக்கடந்துவிட்டது. பெல்சியகுதிரைப்பட்டாளம் அதை அசத்தஞ்செய்துவிட்டது.

—உலகமெல்லாம் பிசாசுகள் நிறைந்திருந்தாலும் சர்மனியர் சூரியனில் தங்கள் இருப்பிடத்தைக்காப்பாற்றிக்கொள்வார்களென்று சர்மனிய மந்திரி சொன்னார்.

பிரான்சர் விச் மொய்யேன்வீச் என்ற இரண்டு பட்டினங்களைப் பிடித்துக்கொண்டார்கள்.

ருசியர் சர்மனியரால் கனசேதமடைந்தார்கள்.

சர்மனியகுதிரைப்பட்டாளம் உவிர்பல்லென் பட்டினத்திற்குச்சமீபத்தில் சிபார்ட்டியென்ற நகரைத்தாக்கிற்று.

பிரான்சர் அல்சாஸ எல்லையைக்கடந்து உக்கிரமான சண்டைபோட்டு அல்ட்கிரிஷபட்டினத்தைப் பிடித்துக்கொண்டார்கள். சர்மனியர் அகழியிலிருந்து பட்டினத்தைக்காத்துக்கொண்டிருக்கையில் துப்பாக்கிமுனையிற்சொருகிய கத்தியுடன் கடுஞ்சண்டைசெய்து முன்னேறிப்போய்ச் சத்துருக்களைத்துரத்த அவர்கள் அலங்கோலமாயோடினர். பிரான்சியகுதிரைப்பட்டாளம் அவர்களைத்துரத்தி அனேகரைக்கொன்றது.

பிரான்சசேனை மல்ஹவ்சென் என்றபட்டினத்தையும் ஒருமணிநேரத்தள் பிடித்துக்கொண்டது. இவ்வெற்றியால் பிரான்சில் மிகுகொண்டாட்டம்நடந்தது. அலசாஸ்நாடு முன்பிரான்சருக்கிருந்தும் 44 வருடங்களின்முன் சர்மனியருக்கானது.

வடஆபிரிக்காவில் சர்மனியருக்குரிய டொகோலாண்டிலும் பிரான்சர் பிரவேசித்திருக்கிறார்கள். அங்கிலேயர் பிரான்சியருதவியுடன் இருபாகங்களைக் கைப்பற்றினார்கள். பிரான்சரும் அத்துட் புகுந்தனர்.

ஆபிரிக்காக்கண்டத்தின் வடமேற்கெல்லையிலிருக்கும் அல்சீரியாக்கரையிலுள்ள 45 பட்டினங்களை மத்தியதரைக்கடலிலுள்ள தமதுயுத்தக்கப்பல்கள் அழித்துவிட்டதாகச் சர்மனியர்சொல்லுகின்றனர்.

நார்சி என்றகடலில்நடந்த சண்டையில் சர்மனி 19 கப்பல்களை இழந்துவிட்டதாய் ஓர் சமாச்சாரம் வெளிப்பட்டிருக்கிறது.

தேம்ஸ்நதிக்கருகில் லூயிஸ்என்ற சர்மன்கப்பலை ஆம்பியோவென்ற பிரித்தானியகப்பல் கடலிலமிழ்த்திவிட்டது. ஆம்பியோவும் தாழ்ந்த சர்மனிய கப்பல்வைத்த சுரங்கத்திற்பட்டு அழிக்கப்பட்டது. அதிலிருந்த 350 போர்வீரரும் ஒருஉத்தியோகஸ்தனும் இறந்தனர். கப்பித்தானும் 16 உத்தியோகஸ்தரும் 135 கப்பல்போர்வீரருங் காக்கப்பட்டார்கள்.

இங்கிலந்தின் மேற்குக்கரையில் சர்மன்வியாபாரக்கப்பலொன்று 25 லட்சம்பவுண் பெறுமதியான சரக்குகளுடன் பிடிக்கப்பட்டது.

சீனாவின் வடபாகத்துள்ள வெஹெயவேஎன்ற இடத்துக்கப்பால் ருசியபோர்க்கப்பலொன்றுக்கும் சர்மனியபோர்க்கப்பலொன்றுக்கும் சண்டைநடந்து இரண்டுங் கடலில் மூழ்கிவிட்டதாம்.

சர்மனிக்கும் அவுஸ்திரியாவுக்கும் இத்தாலி உதவிசெய்யாவிடின் அதன்மேற் போர்க்குறைகூறப்படுமென்று சர்மனி இத்தாலிக்கு அறிவித்தது.

அமரிக்கபிரசாதிபதி தத்துவஅரசர் பிரியப்பட்டால் தாம் மத்தியஸ்தஞ்செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்.

டாசர்பாவாக என்றவிடத்துக்கப்பால் ஒருகப்பற் [illegible] சர்மனிய கப்பல் திரும்பி

யோடிறும்.

அஸ்திரியர் விசொர்ட் என்ற பட்டினத்தையும் சோவிபசார் என்றவல்லையையும் விட்டுவிட்டுப் பின்வாங்கினார்கள். சேர்வியர்விசொர்ட்என்ற பட்டினத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

மொன்றினிக்கிரோவிலுள்ள அன்றிவாரிப்பட்டினத்தின்மேல் இரண்டு அவுஸ்திரிய போர்க்கப்பல்கள் பீரங்கிப்பிரயோகஞ் செய்கின்றன. அதிரியாத்திக்கடலிலுள்ள ஸ்பீசாமுதலிய அவுஸ்திரியாவின் மூன்றுபட்டினங்களை மொன்றினிக்கிரோவர் பிடித்துக்கொண்டார்கள்.

பிரித்தானியருக்கும் அவுஸ்திரியருக்கும் சண்டைதொடங்கிவிட்டது.

அவுஸ்திரியஸ்தானாபதி மொன்றினிக்கிரோவை விட்டுப் புறப்பட்டுவிட்டார்.

மொன்றினிக்கிரோவர் கட்டுரோ என்றவிடத்திற்கு குண்டுப்பிரயோகஞ்செய்கிறார்கள். அவுஸ்திரியா மொன்றினிக்கிரோவை அடைக்கத்துவங்கிவிட்டது, மொன்றினிக்கிரோ சர்மனிய ஸ்தானாபதிக்கு வழிப்பாசுகொடுத்துவிட்டது.

லப்டெட்னெங்கு என்றவிடத்தில் ருசியருக்கும் சர்மனியருக்கும் இரண்டுகோணப்பட்ட சண்டையில் சர்மனியரில் நூறுபேர்சேதம்.

பெல்சியஅரசர் ஒன்றேகால்லட்சம் சேனையுடன் லவேன்என்றவிடத்திற்குச்சென்றிருக்கிறார்.

சர்மனியரின் சம்மரையின்என்னும் நீருள்மூழ்கிச்செல்லுங்கப்பல் பிரித்தானியகப்பற்படை ஒன்றைத்தாக்கியும் பிரித்தானியகப்பலுக்குச்சேதமில்லை. சர்மன்கப்பலொன்று நீருளாழ்ந்தது.

இங்கிலந்தாருக்கும் போர்த்துக்கல்லுக்குமுண்டான உடன்படிக்கைப்படி போர்த்துக்கல் இங்கிலந்துக்கு உதவிசெய்யுமாம்.

லக்சன்பேர்க்கின் தென்கரையிலிருக்கும் எஆசர்அல்செட் என்றவிடத்தின்வழியாய் சர்மனியர் பிரான்சில் பிரவேசிக்கின்றனர்.

☞ அனுபந்தம் பார்.

காட்டுக்காய்ச்சல் வராதபடி தடுப்பதற்கும், வந்தால் மாறுவதற்கும் மருந்து.

ஒருவனுடைய சீவியகாலத்திலே வருகிறவருத்தங்களிலே காட்டுக்காய்ச்சலுமொன்று, பெலவீனரே அதற்கு இரையாவார்கள். தண்ணீர்மயமான இரத்தத்திலே காட்டுக்காய்ச்சற்கிருமிகள் ஆச்சரியத்துக்குரிய விதமாய்ப் பலுகிப்பெருகுகின்றன இந்த நியாயத்தினாலேதான் காட்டுக்காய்ச்சலுள்ள தேசங்களிலே வசிப்பாருள் நல்லிரத்தமில்லாத பெலன்கெட்டிருக்கிறவர்கள் காய்ச்சலும் குளிர்சுரமுமுடையவர்களாயும், சிவந்த இரத்தமுள்ளவர்களாய்ப் பெலனுள்ளவர்கள் அவையில்லாமலுஞ் சீவித்துவருகிறார்கள்.

ஆகையால், காட்டுக்காய்ச்சல்வராது தடுக்கவேண்டுமானால் இரத்தத்தைச் செழிப்புள்ளதாகவும் சுகமுள்ளதாகவும் வைத்திருக்கவேண்டியது முக்கியம். காட்டுக்காய்ச்சலைக் குணமாக்கிக்கொள்வதற்கு காட்டுக்காய்ச்சற் கிருமிகள்பழுதுசெய்துவிட்ட அணுக்களில்புதிய இரத்தத்தைவூட்டுவதினாலே அதன்கெடுதிகளைநீக்கி சோகையகற்றுவதற்கும் மேற்கொள்ளுவதற்கும்பெலனைக்கொடுக்கவேண்டியதுஅவசியம்.

முன்னே காட்டுக்காய்ச்சலுக்குக் கொடுக்கப்பட்டுவந்த மருந்து குயினைன்தான். அது காய்ச்சலைச்சாந்தமாக்கத்தக்கதன்றி மாற்றக்கூடியதன்று. டாக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ் வந்தபின் தகுதியற்ற அந்த மருந்தின் பாவனை நின்றுவிட்டது. இது முன்னே காட்டுக்காய்ச்சலாலே வருந்தினோர் உலகப்பிரசித்திபெற்ற இம்மருந்தை உண்டு குணம்பெற்று சொல்லுஞ்சாட்சிகளாலே உறுதிப்படுகின்றது.

டாக்டர் உவில்லியம்ஸ் பிங் பில்ஸ் இரத்தத்தை செழிப்பும் சிவப்புமானதாக்கி தேகத்திலுள்ள காட்டுக்காய்ச்சற் கிருமிகளைத் தொலைத்து காய்ச்சலாலும் குளிர்சுரத்தாலும் வருந்தும் ஆண்களையும் பெண்களையும் சுகமும் சந்தோஷமும் உள்ளவர்களாக்கிவிடுகின்றது இம்மருந்தை இலங்கையிலே மருந்துவியாபாரிகளெல்லாரிடத்திலும் போத்தல் ஒன்று 2ரூபாயாகவும்6போத்தல்கள் 11 ரூபாயாகவும் வாங்கலாம்

விசேஷமான கொடை
பெரிய ஆதாயம்.

லிவர் கப்பித்தல் கெடியாரத்துடன் இருபதுவித இனாம்சாமான்கள் 6 ரூ 8 அணுவுக்குக்கொடுக்கப்படும்.

